

மே 4ஆம் தேதி நடைபெறவுள்ள 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர், திருத்தணி ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி முகவர்களுக்கு தி.மு.க. தலைமை சார்பில் காணொளி காட்சி மூலம் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.பயிற்சி கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு வாக்கு எண்ணிக்கையின்போது முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்தனர். உடன் திருவள்ளூர் சட்டமன்ற திமுக வேட்பாளர் வி. ஜி.ராஜேந்திரன், திருத்தணி சட்டமன்றத் தொகுதி திமுக கூட்டணி தேமுதிக வேட்பாளர் டி.கிருஷ்ணமூர்த்தி உள்பட மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள், திமுக பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், மற்றும் திருவள்ளூர் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, மயிலம் சட்டமன்ற தொகுதி தேமுதிக வேட்பாளர் வெங்கடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் ,செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### வணிக சிலிண்டர் விலை உயர்வை திரும்பப் பெறவேண்டும்!

# மக்கள் மீது சுமையை திணிக்கிறது பா.ஜ.க. அரசு!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

சென்னை, மே 4-

வணிக பயன்பாட்டிற் கான சிலிண்டர் விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் மோசமான நிர்வாகத்தி னால் ஏற்பட்ட பாதிப்பை, மக்கள் மீது திணிப்பதற்கு கண்டனத்தை தெரிவித் துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இதனால், உணவகங் களை மட்டுமே நம்பியுள்ள மக்கள், மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என் றும் கவலை தெரிவித்துள் ளன.

உடனடியாக இந்த விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் என்றும் இந்திய கம்யூனிட்ஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

### திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக்கூடிய அளவிற்கு வளர்ந்துள்ளது!

# தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும்!

### கள்ளக்குறிச்சியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி



கள்ளக்குறிச்சி,மே 4-

கள்ளக்குறிச்சியில் திரா விடர் கழகம் சார்பில் நடை பெற்ற பெரியாரியல் பயிற் சிப் பட்டறையில் கலந்து கொண்டு பேசிய கி.வீர மணி, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் பேசு கையில் நடந்து முடிந்த தேர்தல் பிரச்சாரத்தில் ஈடு பட்டவனில் நானும் ஒரு வன். மக்களைப் பொருத்த வரை எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவிற்கு, இந்தத் தேர்தலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இருப்பார்கள் என்பதை நாங்கள் கண் டுள்ளோம்.

பிரச்சாரத்தில் தாய்மார் கள் அதிகளவில் வந்து, நாங் கள் பேசியதை ஆர்வத் தோடு கேட்டது மட்டு மல்லாமல், அதை உள்வாங் கிய முறையின் அடிப்படை யில், அதில் அவர்களுக்கு எவ்வளவு விழிப்புணர்வு இருக்கிறது, திராவிட மாடல் ஆட்சியில் எல்லை யற்ற மகிழ்ச்சியை அவர்கள் எப்படி பெற்றிருக்கிறார் கள், நன்றி உணர்ச்சியை அவர்கள் எப்படி வெளி காட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை யெல்லாம் நாங்கள் நேரில் பார்த்து, தெரிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பு கிடைத் தது. அப்படிப்பட்ட தாய் மார்களில் பெரும் பகுதி திராவிடல் மாடல் ஆட் சிக்கு வாக்களித்திருக்கிறார் கள் என்ற நிலை ஏற்பட்டி ருக்கிறது.

எந்தவிதமான சந்தேகத் திற்கும் இடமளிக்காமல், சந்தேகத்திற்கு அப்பாற் பட்டு, திராவிட மாடல் ஆட்சியில் பயனடைந்த மக் கள், மீண்டும் திராவிட மாடல் ஆட்சி வரவேண் டும் என்று வாக்களித்திருக் கிறார்கள் திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது எனத் தெரி வித்தார்.

1971 ஆம் ஆண்டு நடை பெற்ற தேர்தலில் 184 இடங்களை பெற்று திமுக வரலாறு படைத்தது, இதோடு முடிந்தது இனி தி.மு.க. ஆட்சிக்கு வராது என்று ஆருடம் கணித்தவர் கள் எல்லாம் அடையாளம் தெரியாமல் ஓடிவிட்டார் கள், துண்டைக் காணோம், துணியை காணோம் என்று 1971 ஆம் ஆண்டு நடை பெற்ற அதே நிலை மே 4ஆம் தேதிக்கு பிறகு வரும், கோட்டைக்கு அனுப்புப வர்களை, ஆட்சியில் அமர வைப்பவர்களை ஆட்சிக்கு அனுப்பி வைப்பார்கள். காட்சிக்கு அனுப்ப வேண் டியவர்களை திரும்ப, காட் சிக்கு திரும்ப செய்வார்கள். இந்த நிலைதான் நிலவும், மக்களுக்கு நல்லது செய்வ தைப்போல பா.ஜ.க.வினர் நடிப்பார்கள். ஆனால், நல் லதை செய்ய மாட்டார்கள். அவர்கள் விஷம் கலந்த உருண்டையில் தேனை கலந்து வைத்திருப்பார்கள். அதை அம்பலப்படுத்துவ தற்கு தமிழ்நாடு தயாராக இருக்கிறது.

இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் உள்ள மக் கள் பாஜகவை நம்பி ஏமாந் தாலும், தமிழக மக்கள் ஒரு போதும் ஏமாற மாட்டார்கள்.

இதற்குக் காரணம், தமிழ்நாடு பெரியார் நாடு, இங்கு அடிமைகளுக்கு இட மில்லை. சுதந்திரச் சிந்தனை யாளர்களுக்கும், போராட் டம் செய்யக்கூடிய அமைதி பூங்காவில் மதவெறி, ஜாதி வெறியை தூண்டி, கலவரம் உண்டாக்கி, தங்கள் ஆதிக் கத்தை மறைமுகமாக புகுத் தலாம் என்ற பா.ஜ.க.வின் திட்டம் இங்கு, ஒருபோ தும் நடக்காது. கன்னி வெடிகளாக இருந்தாலும், அந்த கன்னி வெடிகளை தூக்கி வெளியே போடக் கூடிய ஆற்றல், திராவிட இயக்கத்திற்கு உண்டு. அத னடிப்படையில், ஒரு நல்ல செய்தியை இன்னும் இரண்டு நாட்களில் நீங்கள் கேட்பீர்கள் என்று கூறி னார். மேலும் கருத்துக்க ணிப்பு அல்ல, அது கருத்து திணிப்பு என்றும், அ. தி.மு.க.தான் ஆட்சி அமைக் கும் எனவும் எடப்பாடி பழ னிசாமி கூறி யிருக்கிறாரே என்று கேட்ட கேள்விக்கு பதிலளித்த கி.வீரமணி, கனவு காண எல்லாருக்கும் உரிமை உண்டு. ஆனால், எந்தக் கனவு நிறைவேறு கிறது என்பதுதான் மிக முக் கியம்.

ஆசைகள் குதிரைகளா னால் யார் வேண்டுமானா லும் சவாரி செய்யலாம் என தெரிவித்த நிலையில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் மீது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பு அதிக ரித்துள்ளது என்றும், தி.மு.க. ஆட்சி தொடரவே மக்கள் விரும்புகின்றனர் என்றும், தமிழ்நாட்டில் ஒரு நிலையான அரசு வேண் டும், வளர்ச்சி வேண்டும், மக்கள் நல திட்டங்கள் வேண்டும், இந்த மூன்று எதிர்பார்ப்புகள் தான் தமி ழக முழுவதும் எதிரொலிக் கிறது, இந்த மூன்றையும் கடந்த முறை அளித்த தி. மு.க. தலைமையிலான மத சார்பற்ற முற்போக்கு கூட் டணி அரசு அடுத்த 5 ஆண் டுகளுக்கும் தொடரும், ஆகவே தமிழ்நாட்டு மக்க ளின் பேராதரவுடன் மீண் டும் தி.மு.க. ஆட்சி அமைக் கும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர் கள் செய்தியாளர்களி டையே கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா. பரமசிவம்

### மே 4 (2020)



கழகம் துவக்கப்பட்ட போதே உறுப்பினராகி, கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் பகுதியில் கிளைச் செயலாளர், ஒன்றிய பொருளாளர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

தனது சொந்த வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்து வைத்து, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் அன்று பள்ளி மாணவர்களுக்கான நோட்டுபுத்தகம், பேனா, பென்சில் ஆகியவற்றை இலவசமாக கொடுத்து வந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# கலைச்சேவை, கல்விச் சேவை இரண்டையும் தமது வாழ்வின் இருபெரும் இலட்சியங்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர்!

## குமாரராணி – முனைவர் மீனா முத்தையா மறைவு!

## இரங்கல் செய்தியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, மே 4–**

**செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் திருமிகு மீனா முத்தையா அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:–**

செட்டிநாட்டுஅரசர்குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் திருமிகு மீனா முத்தையா அவர் கள் மறைவுற்ற செய்தியறிந்து மிக வும் வருந்தினேன்.

கலைச்சேவை, கல்விச் சேவை இரண்டையும் தமது வாழ்வின் இருபெரும்

இலட்சியங்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் திரு மிகு மீனா முத்தையா அவர்கள்.

தஞ்சாவூர்க் கலைக்குப் புத்துயிர் கொடுத்து, அதற்காகவே குமார ராஜா முத்தையா கலை மற்றும் கைவினைக் கலைப் பள்ளியின் மூலம் பயிற்சியும் அளித்து வந்த அவரது பணிகள் என்றென்றும் நினைவுகூரப்படும்.

தனிப்பட்ட முறையிலும் எங்க ளது குடும்பத்துடன் இனிய நட்புற வைப் பேணி வந்த அவர், எனது துணைவியாரின் நூல் வெளியீட்டு விழாவிலும் 2018ஆம் கலந்து கொண்டு உரையாற்றியதை இவ் வேளையில் நினைவுகூர்கிறேன்.

திருமிகு மீனா முத்தையா அவர் களது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள், நிறுவனங்களில் பணி யாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது இரங் கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### மேற்குவங்க வாக்கு எண்ணிக்கை

# தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

கொல்கத்தா, மே. 4-

மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது ஒன்றிய அரசு மற் றும் மாநில அரசு பணியா ளர்களை கலந்து நியமிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதி மன்றம் உத்தரவிட் டுள்ளது.

மேற்குவங்க சட்டப்பே ரவை இரண்டு கட்டங்க ளாக சட்டப்பேரவை தேர் தல் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இந்த தேர்தலில் பதிவான வாக் குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண் ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை மேற் பார்வை பணிகளுக்கு ஒன் றிய அரசு ஊழியர்களை மட்டுமே தேர்தல் ஆணை யம் நியமித்துள்ளதாக புகார் எழுப்பி உச்சநீதிமன் றத்தில் திரிணாமுல் காங்கி ரஸ் கட்சி வழக்கு தொடர்ந்து இருந்தது. இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரஸ் கோரிக்கை வைத்தது.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கை விசாரிக்க சிறப்பு அமர்வு அமைக்கப் பட்டது. நீதிபதி நரசிம்மா தலைமையிலான அமர்வில் வழக்கு விசாரணைக்கு வந் தது. அப்போது, ஏற்கனவே ஒவ்வொரு மேசையிலும் ஒரு மைக்ரோ பார்வையா ளரை ஒன்றிய அரசு பார் வையாளராக நிய மித்துள்ளது. இதற்கு மேலும் ஒரு மத்திய பார் வையாளர்நியமிக்கப்பட்டு வருவதாக கபில் சிபில் குற் றம் சாட்டினார். மாநில அரசு பணியாளர்களையும் மேற்பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கையில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தேர்தல் விதிமுறையை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். அதன்ப டியே நியமனம் நடத்தப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் வாதி டப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஒன் றிய அரசு ஊழியர்கள் இருவரையும் மேற் பார்வை பணிகளுக்கு கலந்து நியமிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது. தேர்தல் ஆணையம் தனது சொந்த சுற்றறிக்கையை முறைப் படி அமல்படுத்த வேண் டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தது.

### பஞ்சாப் சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு!

# ஆளும் ஆம் ஆத்மி கட்சி பெரும்பான்மையை நிரூபித்தது!

சண்டிகர், மே. 4–

பஞ்சாப் சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப் பில், ஆளும் ஆம் ஆத்மி கட்சி பெரும்பான்மையை நிரூபித்தது.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 எம்.பிக்கள் பா.ஜ.வுக்கு மாறிய நிலையில், பஞ்சாப் மாநிலத்தில் ஆளும் ஆம் ஆத்மியைச் சேர்ந்த பெரும்பாலான எம்.எல்.ஏ.க்கள் கட்சி மாற உள்ளதாக தகவல் பரவி வந்தது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, அம்மாநில முதலமைச்சர் பகவந்த் மான், அரசுக்கு ஆதரவாக சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக் கெடுப்பு நடத்தும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

117 சட்டமன்ற உறுப்பினர்க ளைக் கொண்ட பஞ்சாப் சட்டப்பேர வைக்கு, பெரும்பான்மையை நிரூ பிக்க 59 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தேவைப்பட்டது.

இதில் ஆளும் ஆம் ஆத்மி கட்சிக்கு 94 எம்.எல்.ஏ.க்கள் இருந்த நிலையில், சில காரணங்ளுக்காக 6 பேர் அவைக்கு வராததால், 88 வாக் குகள் கிடைக்கப் பெற்று, முதல மைச்சர் பகவந்த மான் பெரும்பான் மையை நிரூபித்தார்.



நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறையின் சார்பில் வாக்கு எண்ணும் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் மற்றும் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் முகவர்களுடன், நுங்கம்பாக்கத்தில் உள்ள ராமா திருமண மண்டபத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை பெற்றனர். மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் அண்ணா நகர் தொகுதி வேட்பாளருமான நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு தொகுதி வேட்பாளர் மருத்துவர் எழிலன், பகுதி செயலாளர்கள், தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் என அனைவரும் பங்கேற்றனர்.